இந்தியா கவுன்சிலின் செலவுகள் அனைத்தும் இந்திய வருவாயிலிருந்தே செய்யப்பட்டன என்றாலும் எந்த இந்தியரும் கவுன்சிலின் உறுப்பினராக இருக்கவில்லை. மேலும் கவுன்சில் உறுப்பினர்கள் இந்திய நிர்வாகத்தில் பத்து ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டதால் இந்திய நிர்வாகம் பற்றிய முடிவுகளை திறமையுடன் எடுக்க முடிந்தது.

இந்த சட்டத்தில் 'இனி ஆக்கிரமிப்பு செய்வதில்லை' என்று உறுதி கூறப்பட்டதால் இந்திய அரசர்கள் நிம்மதி பெருமூச்சுவிட்டனர். டல்ஹௌசி பிரபுவின் நாடுபிடிக்கும் கொள்கை கைவிடப்பட்டதால் இந்திய அரசர்கள் இங்கிலாந்து ஆட்சியின் மீது விசுவாசம் வைக்க ஆரம்பித்தனர்.

ஆனாலும் 1858-ம் வருடச் சட்டப்படி இந்தியர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. இந்திய நிர்வாகம் லண்டன் நகரிலிருந்து நடத்தப்பட்டதால் ஆங்கில அதிகாரிகளின் செயல்களை அப்படியே அரசு ஏற்றுக் கொண்டது. எதையும் கண்டிக்கவில்லை. இந்தியா அமைச்சர் மற்றும் இந்தியா கவுன்சிலின் செலவுகள் அனைத்தும் இந்திய வருவாயிலிருந்து கொடுக்கப்பட்டதை இந்தியர் விரும்பவில்லை. அதிகமான செலவினங்கள் ஏற்பட்டு தாங்க முடியாத நிலையில் இந்தியப் பொருளாதாரம் இருந்தது. எவ்வாறெனினும் 1858-ம் வருடச் சட்டம் சிறப்பானதும், இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்றும் கூறுவது பொறுத்தமானதேயாகும்.



# 25. மகாராணியாரின் பேரறிவிப்பு, 1858

**(Queen's Proclamation, Nov.1, 1858)**

*1857-ம் வருட சிப்பாய் கலகத்திற்குப் பிறகு கம்பெனியின் ஆட்சியை நீக்கிவிட்டு இந்தியாவை இங்கிலாந்து ஆட்சியின் கீழ் நேரடியாகக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. இதற்காக 1858-ம் வருடம் ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதி ஒரு சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது 'இந்தியாவில் மிகச் சிறந்த அரசை உண்டாக்குவதற்கான சட்டம்' (Act for the better government of India) என வழங்கப்பட்டது. ''அரசியாலும், அரசியார் பெயரிலும், நாட்டின் முக்கிய காரியதரிசிகளுள் ஒருவர் மூலம் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனை சபை உதவியுடன் இந்தியா ஆட்சி செய்யப்படும்'' என்று அந்த சட்டம் கூறியது.*

*இந்திய அரசாங்கத்தை கம்பெனியிடமிருந்து இங்கிலாந்து தனது நேரடி ஆட்சியின் கீழ் ஏற்றுக் கொண்டதை இந்திய மக்களுக்கு முறைப்படி அறிவிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி அப்போது இங்கிலாந்தை ஆண்டு வந்த பேரரசி விக்டோரியாவின் பெயரால் அலகாபாத் நகரில் நடைபெற்ற ஒரு பிரமாண்டமான தர்பாரில் வைசிராய் கானிங்பிரபு ஒரு பிரகடனத்தின் மூலம் 1858 நவம்பர் 1-ம் தேதி இந்தியாவிலுள்ள பத்து கோடி மக்களுக்கு அறிவித்தார். அதுவே மகாராணியாரின் பேரறிவிப்பு எனப்படுகிறது. 'இந்திய மக்களின் மகாசாசனம்' என்று அது புகழப் படுகிறது.*

## மகாராணியாரின் பேரறிவிப்பின் முக்கிய அம்சங்கள்:

*மகாராணியாரின் பேரறிக்கை டெர்பி பிரபு என்பவரால் தயாரிக்கப் பட்டு விக்டோரியா மகாராணியால் அங்கீகாரம் செய்யப்பட்டது. இந்த பேரறிவிப்பு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கைகளையும் இந்தியா எதிர் காலத்தில் எவ்விதமாக ஆளப்படும் என்ற உறுதி மொழியையும் கொண்டிருந்தது. அதில் காணப்பட்ட முக்கியமான சாராம்சங்கள் பின்வருமாறு:*

1. இதுவரை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியால் ஆளப்பட்டு வந்த இந்தியா இனி பிரிட்டிஷ் பேரரசியால் நேரடியாக ஆட்சி செய்யப் படும்.

2. இந்திய சுதேச அரசர்களுடன் கம்பெனி செய்து கொண்ட உடன் படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் பிரிட்டிஷ் அரசு அப்படியே ஏற்றுக் கொண்டு உறுதிப் படுத்திக் கொள்ளும்.

3. கானிங் பிரபு பிரிட்டிஷ் நேரடி ஆட்சியின்கீழ் முதல் இந்திய வைசிராயாகவும் கவர்னர் ஜெனரலாகவும் நியமனம் செய்யப்படுவார்.

4. இந்திய சுதேச அரசர்களின் உரிமைகள், மதிப்பு, அந்தஸ்து ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மதித்து நடக்கப்படும்.

5. இந்தியாவின் பழமையான உரிமைகள், வழக்கங்கள், வழக்காறுகள், நம்பிக்கைகள் ஆகியவைகளுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படும்.

6. கிறிஸ்தவ மதக் கொள்கைகளின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் பிரிட்டிஷ் அரசு கிறிஸ்தவ மதக் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் இந்திய மக்கள் மீது திணிக்காது. எனவே மதத்தின் பெயரால் எந்த இந்தியருக்கும் சலுகை வழங்காது. யாருக்கும் இடையூறோ, அமைதியின்மையையோ ஏற்படுத்தாது. சட்டப்படி எல்லோருக்கும் பாரபட்சமற்ற பாதுகாப்பு கொடுக்கப்படும்.

7. இந்திய மக்களின் மத வழிபாட்டிலும், மத நம்பிக்கையிலும் பிரிட்டிஷ் அரசு தலையிடாது முழுமையான மத வழிபாட்டுரிமை வழங்கப்படும்.

8. இப்பொழுது இருக்கக்கூடிய பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளை மேலும் விரிவுபடுத்தும் ஆசை பிரிட்டிஷ் அரசுக்கு கிடையாது. அதாவது நாடு பிடிக்கும் ஆசையில் நாட்டம் இல்லை.

9. இந்திய மக்களின் நல்வாழ்வே பிரிட்டிஷ் அரசின் நோக்கமாகும். மக்களின் நன்மைக்காகவே ஆட்சி நடத்தப்படும். கடவுளின் ஆசீர்வாதத்துடன் உள்நாட்டு அமைதி ஏற்படுத்தப்படும். நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதே எங்கள் தணியாத ஆசை. பொது நன்மைக்கான, வளர்ச்சிப் பணிகளுக்கான பணிகள் மேற்கொள்ளப் படும்.

10. இனம், மொழி, மதம் ஆகிய வேறுபாடுகள் இல்லாமல் கல்வித் தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியர்களுக்கு அரசு



பதவிகள் கொடுக்கப்படும். மேலும் கடமையாற்றுவதில் திறமை, நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் பதிவியிலமர்த்தும் கொள்கை கடை பிடிக்கப்படும்.

11. ஆங்கில குடிமக்களின் கொலைகளில் நேரடியாகச் சம்பந்தப் பட்டவர்கள் தவிர, 1857-58-ம் வருட புரட்சியில் பங்குகொண்ட எல்லா மக்களுக்கும் பொது மன்னிப்பு (general amnesty) அளிக்கப்படும்.

12. மகாராணியாரின் பேறறிவிப்பில் கடைசிக்கு முந்தின வரி மிகவும் புகழ் பெற்ற வரிகளாகும். "அவர்களின் (இந்திய மக்கள்) வளம், அபிவிருத்தி முன்னேற்றத்திலேயே எங்கள் வலிமை, அவர்களின் மனத் திருப்தியே எங்கள் பாதுகாப்பு, அவர்களது நன்றி உணர்வே எங்களுக்கு கிடைக்கும் சன்மானம் ஆகும்.' (In their prosperity will be our strength, in their contentment our security, and in their gratitude our best reward).

### மகாராணியாரின் பேறறிவிப்பு பற்றிய மதிப்பீடு:

மகாராணியாரின் பேறறிவிப்பு இந்திய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்தது. பிரிட்டிஷ் அரசின் பெருந்தன்மை(!)யால் மக்கள் பூரித்துப் போய் விட்டனர். வைசிராய் கானிங் பிரபுவை கருணைமிக்க கானிங் என்று போற்றி கொண்டாடினர். வானமே பூமிக்கு வந்து விட்டதை போன்று பெருமகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால் உண்மையில் மகாராணியாரின் பேறறிவிப்பு வெற்று வார்த்தைகளின் பத்திரம் என்று தான் கூறவேண்டும். "பெருந்தன்மையான வார்த்தைகளைக் கொண்டது. ஆனால் கருமித்தனமாக நடைமுறைப் படுத்தப்பட்டது". (generously worded but niggerdly implemented) என்று குறை கூறப்பட்டது.

நாட்டின் உயர் பதவிகளில் நிறம், இனம், மொழி வேறுபாடில் லாமல் தகுதி பெற்றவர்களே நியமனம் செய்யப்படுவர் என்பது வெறும் ஏட்டளவில் தான் இருந்தது. நடைமுறைக்கு வரவேயில்லை. உயர்பதவி களில் ஆங்கிலேயர்களே நியமிக்கப்பட்டனர். இந்தியர்கள் எடுபிடி வேலை களுக்கும், தண்ணீர் இறைப்பதற்குமே தகுதியானவர்கள் என்று ஆங்கிலேயர் கருதினர். முதல் உலகப் போர் வரை படையிலும் இந்தியர் களுக்கு உயர் பதவி கொடுக்கப்படவில்லை.

நாடுபிடிக்கும் ஆசையில் நாட்டம் இல்லை என்று கூறப் பட்டாலும், சுதேச அரசர்களின் உரிமை, அந்தஸ்து ஆகியவை காக்கப்படும் என்று உறுதிமொழி அளித்தாலும் நடைமுறையில் சுதேச அரசர்கள் பிரிட்டிஷ் அரசின் மேலாண்மையின் கீழ் செல்வாக்கிழந்தே காணப்

பட்டார்கள். பிரிட்டிஷ் அரசின் கைகளில் உள்ள பொம்மைகள் போன்றே விளங்கினர். தங்கள் மதிப்பு கௌரவம் ஆகியவற்றை இழந்து விட்டனர்.

1858-ம் வருடத்திற்குப் பிறகு உள்ள இந்திய வரலாற்றைப் படித்தால் பேரரசியாரின் பேரறிக்கையில் காணப்படும் எந்தக் கொள்கை சயல்படுத்தப்படவில்லை என்பது நன்கு புலப்படும்.

# 26. கானிங் பிரபு

## (Lord Canning)

சார்லஸ் ஜான் கானிங் 1856-ம் ஆண்டு டல்ஹௌசிப் பிரபுக்குப் பிறகு கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்றார். இவர் 1827-ல் இங்கிலாந்தின் புகழ்பெற்ற பிரதமராக இருந்த ஜார்ஜ் கானிங் பிரபுவின் புதல்வராவார். 1812-ம் ஆண்டு பிறந்த கானிங் பிரபு திறமையும், ஊக்கமும் மிக்கவர். தன்னலம் அற்றவர். இவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து பட்டம் பெற்றார். 1852-ம் ஆண்டு முதல் இங்கிலாந்தின் அஞ்சல் துறைத் தலைவராகப் பணியாற்றினார். அதன்பிறகு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். 1856- பிப்ரவரி மாதம் கல்கத்தா வந்து சேர்ந்தார். இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாகவும் (1856-'58), முதல் வைசிராயாகவும் (1858-'62) பணியாற்றினார் கானிங்பிரபு.

## கானிங்பிரபு காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள்:

### 1) பாரசீகப் போர்: 1856.

1856-ல் பாரசீகம் ஹிராட்டைத் தாக்கியது. இதை எதிர்த்து கானிங்பிரபு பாரசீக வளைகுடாவிற்கு ஒரு கப்பற்படையை அட்மிரல் ஜேம்ஸ் அவுட்ராம் (James outram) என்பவர் தலைமையில் அனுப்பினார். அப்படை பாரசீகத்தைத் தோற்கடித்தது. 1857-மே மாதம் பாரசீகத்துடன் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதன்படி பாரசீகர்கள் ஹிராட்டை விட்டு வெளியேற வேண்டும். அத்துடன் ஆப்கானிஸ்தான் விவகாரத்திலும் தலையிடாமல் இருக்க பாரசீகம் ஒப்புக் கொண்டது. ஆப்கானிய அரசர் தோஸ்த் முகமதுவுடன் கானிங்பிரபு ஒரு நட்பு உடன்படிக்கையை செய்து கொண்டார்.



### 2) 1856-ம் வருட பொதுச் சேவைச் சட்டம்:

(General Service enlistment Act.)

படைக்கு ஆள் சேர்ப்பது குறித்து 1856-ஜூலை 25-ம் தேதி கானிங்பிரபு ஒரு சட்டம் இயற்றினார். அதன்படி "இந்தியாவில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் போய் பணியாற்ற விருப்பம் உள்ளவர்கள் மட்டுமே படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று அறிவிக்கப்பட்டது. இதனால் வைதீகக் கொள்கையைப் பின்பற்றிய பல இந்துக்கள் கடல் கடந்து செல்ல விரும்பவில்லை. எனவே அவர்கள் படையில் சேர முடியாமல் போனது.

1856-ஜூலை 26-ல் மற்றொரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி இந்து விதவைகள் மறுமணம் செய்து கொள்வது அனுமதிக்கப்பட்டது. அத்துடன் அதன்படி பிறக்கும் குழந்தைகளுக்கு முறைப்படி குடும்பச் சொத்தில் எல்லா உரிமைகளும் உண்டு என்று கூறப்பட்டது.

மேற்கண்ட இரண்டு சட்டங்களையும் வைதீக இந்துக்கள் மனத்தைப் புண்படுத்தியது. அவர்கள் எரிச்சலடைந்தனர். இந்த சட்டங்கள் மூலம் இந்து சமய பழக்க வழக்கங்களையும், சமயக் கொள்கைகளையும் ஆங்கிலேயர் அழிக்க முற்படுகின்றனர் என்று எண்ணினர். கிறிஸ்தவ மதத்தைப் பரப்பவே கானிங் பிரபு இந்தியா வந்திருப்பதாக எண்ணினர்.

### 3) சிப்பாய்க் கலகம்:1857

டல்ஹௌசி பிரபுவின் நாடு சேர்க்கும் கொள்கையால் மனம் வருந்திய இந்திய மக்களின் எரிச்சல் கானிங்பிரபு காலத்தில் புரட்சியாக வெடித்தது. 1855-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இவர் ஆற்றிய சொற்பொழிவு ஒன்றில் இந்தியாவைப் பற்றி குறிப்பிட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

"நிகழ்ச்சிகள் எவ்வளவு அமைதியாகத் தோன்றினாலும் இந்தியாவில் எச்சமயத்திலும் எதுவும் நிகழக்கூடும். ஒரு மனிதனின் கையைவிடப் பெரிதாக இல்லாத ஒரு சிறிய மேகம் தோன்றி வர வரப் பெரிதாகி இறுதியில் வெடித்து நமக்கு அழிவை உண்டாக்கக் கூடும் என்பதை நாம் மறக்கக் கூடாது" என்றார் கானிங்.

இந்தக் குறிப்பு இந்திய சிப்பாய் கலகத்தைப் பற்றிய முன்னறி குறிகளை அவர் ஓரளவு உணர்ந்திருந்தார் என்று காட்டுகிறது. ஆனால் ஏற்பட்ட கலகத்தை மிகத் திறமையாகவும் தந்திரமாகவும் அடக்கி புகழ் பெற்றார் கானிங். புரட்சியில் பங்கு கொண்ட இந்தியர்களிடம் வெகு

இரக்கமாகவும், நியாயமாகவும் நடந்து கொண்டார். இதனால் தான் இவருக்கு 'காருண்ய கானிங்' என்ற (Canning, the clemency) துணைப் பெயர் வழங்கப்பட்டது.

### 4) வெள்ளையர் படைக்கலகம்: 1859, The white Mutiny.

1858-ம் வருட சட்டப்படி கம்பெனியின் நிர்வாகத்தை இங்கிலாந்து அரசு நேரடியாக ஏற்றுக் கொண்டது. கம்பனியின் பணியாளர் எல்லோரும் இங்கிலாந்து ராணியின் பணியாளர் ஆயினர். கம்பெனியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஐரோப்பியப் படையினர் தங்கள் இசைவைப் பெறாமலேயே இந்திய ஆட்சிப் பொறுப்பை பேரரசியார் ஏற்றுக் கொண்டதால் கோபமடைந்து அரசுக்கு எதிராக 1859-மே மாதம் சுமார் 16,000 வீரர்கள் கலகம் செய்தனர். இதற்கு 'வெள்ளையர் படைக் கலகம்' என்று பெயர். ஆனால் இக்கலகம் எளிதில் அடக்கப்பட்டு விட்டது. சுமார் பத்தாயிரம் வீரர்கள் பணியிலிருந்து வெளியேறினர். அடுத்த ஆண்டில் கம்பனியாரின் படை பேரரசியாரின் படையுடன் இணைக்கப்பட்டது.

### 5) புதிய சட்டங்கள் இயற்றப்படல்: 1861

கானிங் பிரபு காலத்தில் 1861-ம் வருடத்தில் இந்திய கவுன்சில் சட்டமும், இந்திய அரசு பணிச்சட்டமும், இந்திய உயர்நீதி மன்றங்களின் சட்டமும் இயற்றப்பட்டது. 1861-ம் வருட இந்தியக் கவுன்சில் சட்டம் இந்த நூலின் மற்றொரு பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. இந்திய அரசுப் பணி சட்டப்படி பல நியமனங்கள் சிவில் பணியாளர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டது. உயர் நீதி மன்றங்களின் சட்டப்படி தலைமை நீதி மன்றமும் சடர் நீதிமன்றங்களும் இணைக்கப்பட்டன. மேலும் கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் 15 நீதிபதிகளும், ஒரு தலைமை நீதிபதியும் கொண்ட உயர்நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. 1866-ல் அலகாபாத்தில் ஒரு உயர் நீதி மன்றம் அமைக்கப்பட்டது.

### 6) வங்காளக் குத்தகைச் சட்டம்:
### (The Bengal Tenancy Act, 1859)

1859-ல் வங்காளக் குத்தகைச் சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி 12 ஆண்டுகளாக ஒரு நிலத்தை தொடர்ந்து விவசாயம் செய்து வரும் குடியானவரிடமிருந்து நீதிமன்ற உத்தரவில்லாமல் அதிக வரியைப் பெறக் கூடாது. 12 ஆண்டுகள் முடிந்தவுடன் எவ்விதத் தடையுமில்லாமல் அந்த நிலத்தின் உரிமையை அக்குடியானவரே அனுபவிக்கலாம்.



அஸ்ஸாம் மற்றும் நீலகிரி மலைப்பகுதியில் காப்பி, தேயிலை பயிரிடும் ஐரோப்பியர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டது. வங்காளக் குடியானவர்கள் எவ்வாறு ஐரோப்பிய சாயச் செடி சாகுபடியாளர்களால் (Indigo Planters) கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதை விளக்கும் 'நீல்தர்பான்' (Nil Darpan) என்ற நாடகத்தை D.B. மித்ரா(Mitra) என்பவர் எழுதினார்.

### 7) நிதிச் சீர்திருத்தங்கள்: Financial reforms:

இந்தியப் பெருங்கலகத்தாலும், சமூக நிர்வாக புனரமைப்பினாலும் 1857 முதல் 1861-ம் வருடத்திற்குள் அரசுக்கு 36 கோடி ரூபாய் பற்றாக் குறை ஏற்பட்டிருந்தது. இந்த நிலையை சீர்படுத்த அரசு செலவு குறைக்கப்பட்டது. தேவையற்ற பல பதவிகள் ஒழிக்கப்பட்டன. வரி அதிகரிக்கப்பட்டது. இந்த சீர்திருத்தங்கள் 1859-ல் இந்தியா வந்த ஜேம்ஸ் வில்சன் என்பவரின் ஆலோசனையின் பேரில் செயல்படுத்தப் பட்டது. முதன் முதலாக வருமான வரி விதிக்கப்பட்டது. தொழில் வரியும், வியாபாரம் செய்ய லைசென்ஸ் எடுக்கும் முறையும் அறிமுகப்படுத்தப் பட்டது. ராணுவச் செலவுகள் குறைக்கப்பட்டது. உப்புவரி உயர்த்தப் பட்டது. காகித நாணயம் வெளியிடப்பட்டது. இதன்மூலம் 1862-க்குள் பற்றாக்குறை சரி செய்யப்பட்டது.

### 8) நீதித்துறை சீர்திருத்தம்: Judicial reforms

கானிங்பிரபு காலத்தில் சட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டன. 1837-ல் மெக்காலே தொகுத்த இந்திய தண்டனை விதித் தொகுப்பு சில மாறுதல்களுடன் 1860-ல் அமுல்படுத்தப்பட்டது. 1861-ல் கிரிமினல் நடைமுறைத் தொகுதியும், 1859-ல் சிவில் நடைமுறைத் தொகுதியும் நடைமுறைக்கு வந்தது.

### 9) கல்விச் சீர்திருத்தம்: Educational reforms

1854-ல் சமர்பிக்கப்பட்ட வுட்ஸ் என்பவரின் அறிக்கையின்படி 1857-ல் சென்னை, பம்பாய், கல்கத்தா, ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டன. 1858-ல் இந்தியாவில் மொத்தம் 13 பல்கலைக்கழகங்கள் அமைக்கபட்டிருந்தன. அவைகளில் சுமார் 40,000 மாணவர் பயின்று வந்தனர்.

### 10) நிர்வாகச் சீர்திருத்தங்கள்:

புரட்சியின் காரணமாக இந்தியாவில் மக்களாட்சி முறைக்கு அடிகோலியவர் கானிங்பிரபு என்றே சொல்லவேண்டும். 1861-ம் வருடச் சட்டப்படி அறிமுகப்படுத்தப்பட்ட இலாக்காக்கள் பிரித்துக் கொடுக்கும் முறையை (Portfolio system) நடைமுறைப்படுத்தினார். மத்திய சட்டம்

செல்வாக்கைக் கண்டு உண்மையிலேயே பீதியடைந்தனர் ஆங்கிலேயர். சுதந்திர மன்னரான திபாவுடன் உடன்படிக்கை செய்து கொள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் மேல் பர்மாவில் பிரெஞ்சுக்காரர் ஆதிக்கம் ஏற்பட்டால் இந்திய அரசுக்கு ஆபத்து ஏற்பட ஏதுவாகும் என்று நினைத்தனர் ஆங்கிலேயர். மேலும் மூன்றில் இருபகுதி பர்மாவை ஆண்டுவந்த ஆங்கிலேயர் எஞ்சிய பகுதிக்கும் தங்களுக்கு ஒரு வகை உரிமையிருப்பதாகவே கருதினர். எனவே பர்மா மீது படையெடுக்க தக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தனர் ஆங்கிலேயர்.

### 4) ஆங்கில வர்த்தக கம்பனி மீது பர்மிய அரசு எடுத்த நடவடிக்கை:

பம்பாய்-பர்மா வர்த்தக கம்பனி ஒன்று மேல் பர்மாவில் தேக்குமர வியாபாரம் செய்து வந்தது. இந்த ஆங்கிலக் கம்பெனி செய்த ஒரு தவறுக்காக 'கட்சியில்லாமல் செய்யப்பட்ட தீர்ப்பின்படி' (ex-parte) திபா 2,30,000 பவுண்ட் அபராதம் விதித்தார். திபாவின் உண்மையான நோக்கம் இந்த ஆங்கிலக் கம்பெனியை விலக்கிவிட்டு தேக்கு மர வியாபாரத்தை பிரெஞ்சுக்காரர்களுக்கு கொடுக்க விரும்பியதேயாகும்.

### 5) டஃரின் பிரபுவின் எச்சரிக்கையும், கெடுவும்:

ஆங்கிலக் கம்பனியின் மீது விதிக்கப்பட்ட அபராதம் பற்றி மறுபரிசீலனை செய்யுமாறு டஃரின் பிரபு கேட்டுக் கொண்டார். ஆனால் திபா அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே கோபமடைந்த டஃரின் திபாவிற்கு இறுதி எச்சரிக்கை ஒன்று விடுத்தார். அதன்படி மாண்டலேயில் பிரிட்டிஷ் தூதுவர் ஒருவரை வைக்க திபா அனுமதிக்க வேண்டுமென்றும், ஆங்கிலேயருக்கு இணக்கமான வெளிநாட்டுக் கொள்கையையே பின்பற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இந்த எச்சரிக்கையை திபா புறக்கணித்தார். எனவே 1885 நவம்பர் மாதம் வடபர்மா மீது போர் பிரகடனம் செய்தார் தளபதி ஹேரி பிரண்டர்காஸ்ட் (General Harry Prendergast).

### போரின் போக்கு: Course of the war.

1885-நவம்பர் 9-ம் தேதி ஆங்கிலத்தளபதி ஹேரி பிரண்டர் காஸ்ட் தலைமையில் ஆங்கிலப் படை ஒன்று பர்மா மீது படையெடுத்தது. இரண்டு வாரங்களுக்குள் மாண்டலே கைப்பற்றப்பட்டது. கடைசி பர்மிய அரசர் திபா தன் அரண்மனையிலேயே கைதியாக்கப்பட்டார். அவரும் அவர் குடும்பத்தாரும் பின்னர் சென்னைக்கு அனுப்பப்பட்டனர். இந்தியாவில் மகாராஷ்டிரமாநிலத்தில் ரத்தின கிரியில் வாழ்ந்து உயிர் நீத்தார். ரத்தின கிரியில் திபாவின் கல்லரை உள்ளது. 1886 ஜனவரி முதல் 'வட பர்மாவும் ஆங்கில ஆட்சிக்கு உட்பட்டது' என்று அறிவிக்கப்பட்டது.



### போரின் விளைவுகள்:

1) மேல் பர்மா ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டது.

2) ஆங்கில இந்திய அரசின் எல்லை சீனா, இந்தோ சீனா ஆகிய நாடுகளின் எல்லை வரை பரவியது.

3) 1897-ம் ஆண்டு மேல்பர்மாவும், கீழ்பர்மாவும் இணைக்கப்பட்டு ஒரு துணை ஆளுநரின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

4) 1935-ம் வருட சட்டத்தின்படி இந்தியாவிலிருந்து பர்மா தனியாகப் பிரிக்கப்பட்டு ரங்கூனைத் தலைநகராகக் கொண்டு ஒரு தனி ஆளுநரின் ஆட்சியின் கீழ் இயங்கி வரலாயிற்று.

பிரிட்டிஷ் பிரதேசங்களின் எல்லையிலுள்ள ஆசிய நாடுகளில் ரஷ்யா அல்லது பிரான்ஸ் போன்ற வலிமை வாய்ந்த ஐரோப்பிய வல்லரசுகள் தங்கள் அரசியல் செல்வாக்கை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சத்தின் அடிப்படையில் தான் ஆங்கிலேயரின் கொள்கைகள் வகுக்கப்பட்டன. இதன் விளைவாகவே ஆப்கானியப் போர்கள் மற்றும் பர்மியப் போர்கள் ஏற்பட்டன. மூன்று பர்மியப் போர்களின் விளைவாக பர்மா முழுவதும் பிரிட்டிஷ் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

# 31. கர்சான் பிரபு

## (Lord curzon, 1899-1905)

ஜார்ஜ் நத்தானியேல் கர்சான் இந்தியாவில் பதவிவகித்த அரச பிரதிகளில் மிகவும் இளையவர் ஆவார். 1859 ஜனவரியில் இங்கிலாந்தில் கெடில்ஸ்டன் (Kedleston) என்ற இடத்தில் பிறந்தார். ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்றார். கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த இவர் தனது 27-ம் வயதில் 1886 ல் பாராளுமன்ற உறுப்பினரானார். 1891-ல் இந்தியா அமைச்சரின் உபசெயலாளராகப் பணியாற்றினார். வைசிராயாகப் பதவி ஏற்கும் முன்பு நான்குமுறை இந்தியா வந்திருந்தார். இதனால் இதர

வைசிராய்களை விட இந்தியாவின் நிலையை நன்கு அறிந்து வைத்திருந்தார். 1899-ஜனவரியில் தனது நாற்பதாம் வயதில் வைசிராயாகப் பதவி ஏற்றார்.

இந்தியா தவிர பெர்சியா, ஜப்பான், சீனா, இலங்கை போன்ற நாடுகளுக்கு பிரயாணம் செய்திருந்தார். எனவே கீழை நாட்டு அரசியல் பிரச்சனைகளை நன்கு அறிந்து வைத்திருந்தார். Russia in central asia, Persia, Problems of the far east போன்ற நூல்களை எழுதினார். ஆனாலும் ஆசிய நாடுகளைப் பற்றிய தன்னுடைய அறிவு போதாது என்றே கருதினார். 'கிழக்குப் பகுதி ஒரு மாணவனும் பட்டம் பெற முடியாத ஒரு பல்கலைக்கழகம்,' என்று ஆசிய நாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்.

ஆனால் கர்சான் தற்பெருமை மிக்கவர். 'ஆங்கிலேயர் இந்தியாவை ஆளப் பிறந்தவர்கள். இந்தியர்கள் அவர்கள் சொற்படி கேட்டு நடத்தல் அவசியம்' என்ற மனப்பான்மை கொண்டவர். ஆங்கிலேயர்களே உயர்ந்தவர்கள் என்ற இருமாப்பு உள்ளம் கொண்டவர். எனவே இந்தியர் உள்ளத்தில் வெறுப்பையும் குமுறலையும் உண்டாக்கினார். இந்திய தேசிய உணர்ச்சியை உதாசீனம் செய்தார். அவமதித்தார். இதனால் காங்கிரசின் அன்பையும் ஆதரவையும் இழந்தார். இவர் காலத்தில் தான் சுதந்திர உணர்வு இந்திய மக்களிடம் வேகமாகப் பரவியது.

## கர்சான் பிரபுவின் சீர்திருத்தங்கள்:

இந்தியாவில் ஏற்பட்டிருந்த பசியும் பஞ்சமும் கொள்ளை நோயும் நாட்டின் நிர்வாக மாற்றத்தின் தேவையை அறிவித்துக் கொண்டிருந்தது. தேசிய உணர்வு கொண்ட இந்தியர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை விமர்சித்துக் கொண்டிருந்தனர். இங்கிலாந்தின் ஏகாதிபத்திய உணர்வால் இந்தியப்படையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இந்த சமயம் பதவி ஏற்ற கர்சான் பிரபு பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியதிருந்தது.

### 1) நிர்வாக சீர்திருத்தம்:

நாட்டில் அதிகரித்துக் கொண்டு வரும் மக்கள் தேவைக்கேற்ப நிர்வாகத் துறைகளையும் மாற்றி அமைத்துக் கொள்வதே ஆட்சியின் வளர்ச்சிக்கு உதவும் என்ற கொள்கையை உடையவர் கர்சான். இதனால் நாட்டின் நிர்வாகத்துறைகளைப் பிரித்து தனித்தனி அதிகாரிகளை நியமித்து அவர்கள் தீவிரமாக செயல்பட வழி செய்தார். ஆனால் எல்லாத் துறைகளுடனும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி தனது



மேற்பார்வையில் இவை இயங்கும் படியாக வழி வகுத்தார். மாநிலங்களின் ஆளுநர்கள் எதேட்சையாக செயல்படாமல் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் பணி ஆற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். நிர்வாகத் துறை ஒவ்வொரு காரியத்தையும் காலம் கடத்தாது உடனடியாகச் செய்து முடிக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்தார். எல்லா நிர்வாகக் காரியங்களையும் தாமே செய்யாமல் தனித்தனியே பல நிபுணர் குழுக்களை அமைத்து அக்குழுக்களின் ஆலோசனையின் படியே சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

### 2) பஞ்ச நிவாரண வேலைகள்: (Famine Policy)

1896-ம் ஆண்டிலிருந்து இந்தியாவில் பெரும் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அத்துடன் காலரா, காய்ச்சல் போன்ற கடுங் கொள்ளை நோய்கள் பரவின. வடமேற்கு மாகாணம், மத்திய, மேற்கு இந்தியா, தக்காணம் ஆகிய பகுதிகளில் சுமார் பத்து லட்சம் மக்கள் மடிந்தனர். இந்த பஞ்சத்தை போக்குவதற்கு கர்சான் பிரபு முயற்சித்தார். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தாமே நேரில் சென்று ஆங்காங்கே செய்யப்பட வேண்டிய நிவாரண வேலைகளை தீவிரமாக நிறைவேற்றச் செய்தார். பஞ்ச நிவாரண ஆலோசனைகளைக் கூறுவதற்கு சர் அந்தோணி மக்டோனால் (Sir Anthony Macdonnell) என்பவரின் தலைமையின் கீழ் ஒரு குழுவை அமைத்தார். அக்குழு 1901-ல் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

பஞ்ச நிவாரண வேலைகளில் உள்ளூர் வேலைகளுக்கு குறிப்பிட்ட சில சமயங்களில் அதிக முக்கியத்துவம் கொடுத்தல், பஞ்ச நிவாரண உதவி அளிக்கும்போது அதிகாரிகள் அல்லாதவர் உதவியை அதிகமாகப் படுத்துதல், விவசாயிகளுக்கு வங்கிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் விவசாயக் கடன் சங்கங்களை நிறுவுதல், நீர்ப்பாசன வசதிகளை விரிவுபடுத்துதல், பஞ்ச நிவாரண ஆணையர் ஒருவரை நியமித்தல் ஆகிய பரிந்துரைகளைச் செய்தது. இதில் பல பரிந்துரைகளை ஏற்று செயல்படுத்தினார் கர்சான்.

### 3) கல்வித்துறை சீர்திருத்தங்கள்: Educational reforms.

இந்தியாவில் அப்போதிருந்த கல்விமுறையானது கர்சான் பிரபுவுக்கு திருப்தியளிக்கவில்லை. கல்வி முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் நாட்டில் ஒழுக்கக் குறைவு காணப்பட்டது. அரசியல்வாதிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாகவே கல்லூரிகள் காட்சியளித்தன. சிறந்த கல்வியாளர்களையும், பல்கலைக் கழகத்தலைவர்களையும் கொண்ட மாநாடு ஒன்றை 1901-ல் சிம்லாவில்

## 12) வங்காளப் பிரிவினை: 1995. Partition of Bengal, 1905

கர்சான் இந்தியர்களுக்கு எதிராக செய்த பல காரியங்களில் முக்கியமானது அவர் செய்த வங்கப்பிரிவினையாகும். நிர்வாக வசதிக்காக பெரிய மாநிலமான வங்காளத்தை மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம் என்று இரு மாநிலங்களாகப் பிரித்தார். ஆனால் இதன் முக்கிய நோக்கம் மதம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியர்களிடம் வேற்றுமைகளை ஏற்படுத்துவதற்காகவேயாகும்.

வங்காளப் பிரிவினையை எதிர்த்து சுரேந்திர நாத்பானர்ஜியின் தலைமையில் மக்கள் புரட்சி செய்தனர். ஆனால் கர்சான் தான் செய்ததே சரியென்று வாதிட்டார். பிரிட்டிஷ் பேரரசும் அதை ஒப்புக் கொண்டு அமுல்படுத்தியது. இதனால் இந்தியர்களின் வெறுப்பிற்குள்ளானார் கர்சான். 1911-டிசம்பர் மாதம் இந்த வங்கப் பிரிவினை நீக்கப்பட்டது.

### கர்சான் பிரபுவின் வெளிநாட்டுக் கொள்கை:

இந்தியாவின் எல்லைப்புறங்களைப் பாதுகாத்து பகைவர்களின் படையெடுப்பிலிருந்து நாட்டைக் காப்பாற்றி ஆங்கில ஆதிக்கத்திற்கு பங்கம் வராதபடி திட்டங்களை வகுத்து வந்தார் கர்சான். பிரான்ஸ் துருக்கி, ரஷ்யா போன்ற பல நாட்டினர் பிரிட்டனின் பேராதிக்கத்தை தடுக்க முயற்சி எடுத்துக் கொண்டன. அதைக் கண்ட கர்சன் தந்திரமாக பாரசீகம், திபெத் ஆகிய நாடுகளின் நட்பையும் ஆதரவையும் பெற்றார். வடமேற்கு எல்லைப்புற பாதுகாப்பிலும் அவர் கவனம் செலுத்தினார். 'நாங்கள் இந்த பிரதேசங்களைப் பிடித்து ஆட்சி புரிய விரும்பவில்லை. ஆனால் இப்பிரதேசங்கள் எங்கள் பகைவர் கையில் சிக்க நாங்கள் அனுமதியோம்' என்று கூறினார் கர்சான்.

### மதிப்பீடு: Estimate.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பெருக்குவதில் ஆர்வமிக்கவர் கர்சான். 'இந்தியாவே பிரிட்டிஷ் பேரரசின் அச்சு. பேரரசின் வேறு எப்பகுதியை இழக்க நேர்ந்தாலும் நம் பேரரசு நீடிக்கலாம். ஆனால் இந்தியாவை இழப்போம் என்றால் பிரிட்டிஷ் பேரரசின் சூரியன் மறைந்து விடும்' என்றார் கர்சான். இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசை அசைக்க முடியாதபடி உறுதிப் படுத்துவதாகவே இவரது அயல் நாட்டுக் கொள்கையும் உள்நாட்டு ஆட்சி முறையும் அமைந்தன.

ஆனால் மக்களோடு அவர் கொண்டிருந்த தொடர்பைக் கவனிக்கும் போது அவரது ஆட்சியில் தோல்வியுற்றவராகவே கருதப்படுகிறார்.



இந்தியர்களை அவர் மதிக்கவில்லை. ஆட்சித்துறையில் இந்தியர்களுக்கு எதும் சலுகை வழங்கினால் இறைவனின் ஆணையை தாம் மீறி நடப்பதற்குச் சமம் என்று கருதினார். இவரது சீர்திருத்தங்கள் அனைத்துமே இந்திய மக்களின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்தற்கும் தடையாகவே இருந்தன.

இந்திய தேசிய காங்கிரசின் தலைவர் இவரைச் சந்திக்க முயன்றபோது அதற்கு கர்சான் இடம் கொடாமல் இழிவாகப் பேசினார். 'இதுவரை ஒன்றும் சாதித்திராத இந்திய தேசிய காங்கிரஸ் வெற்று வேட்டு போன்ற தீர்மானங்களைக் கொண்டது'' என்றார். இதனால் கர்சான் இந்திய மக்களின் சுதந்திர உணர்ச்சியை வளர்த்து விட்டார் என்று கூறலாம். நாடுமுழுவதும் அமைதியின்மையும் அரசியல்புரட்சிகளும் தலைகாட்டின. கோகலே மதவெறியும், அதிகாரவெறியும் கொண்ட ஔரங்கசீப்பிற்கு கர்சான்பிரபுவை ஒப்பிட்டார்.

''சுதந்திரத்தையும் சுயாட்சியையும் விரும்பிய இந்தியர்களுக்கு தீராத அடிமைத்தனத்தையே கற்பித்து வந்தார் கர்சான். பிரதிநிதித்துவ ஆட்சிமுறைக்கு அடிப்படையான ஸ்தல சுயாட்சி நிறுவனங்கள் மீது கட்டுப்பாட்டை விதித்தார். சுதந்திரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்திய கடிகாரத்தை கர்சான் பின்னோக்கிச் செல்லும்படியாகத் தூண்டினார்'' என்று கூறினார் லாலா லஜபதிராய்.

### கர்சான் பிரபுக்குப் பின்னர் பதவி வகித்த வைசிராய்கள்

| | |
|---|---|
| மின்டோ II | (1905-10) |
| ஹார்டிஞ்ச் II | (1910-16) |
| செம்ஸ் போர்ட் | (1916-21) |
| ரீடிங்பிரபு | (1921-26) |
| இர்வின் | (1926-31) |
| வில்லிங்டன் | (1931-36) |
| லின்லித்கோ | (1936-43) |
| வேவல் | (1943-47) |
| மவுண்ட்பேட்டன் | (1947-48) |

# 32. மூன்றாம் ஆப்கானியப் போர்

**(Third Afghen war, 1919)**

## (ஆங்கிலேயரின் வடமேற்கு எல்லைக் கொள்கை, 1884-1926)

### 1) டப்ரின் காலத்தில் ஆங்கில ஆப்கானிய உறவு: 1884-88

1881-ம் ஆண்டிற்குப் பிறகு மத்திய ஆசியாவில் ரஷ்ய ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது. 1884-ல் ரஷ்யர் ஆப்கானிஸ்தானத்தின் எல்லைக்கு சுமார் 150 மைல் தொலைவிலிருந்த மெர்வ் (Merv) என்ற இடத்தைக் கைப்பற்றினர். இது அவர்கள் ஆக்கிரமிப்பின் உச்ச எல்லையாகும். எனவே ரஷ்ய ஆப்கானிய எல்லையை வரையறுப்பது இன்றியமையாதது ஆகி விட்டது. எனவே ஆங்கில ரஷ்ய ஆணையர்கள் இதுபற்றி 1884 அக்டோபர் மாதம் சாராக்ஸ் (Sarakhs) என்ற இடத்தில் பேசினார்கள்.

**பாஞ்ச்டே பிரச்சனை:** (Panjdeh crisis) இச்சமயத்தில் ஆப்கானியர்கள் பாஞ்ச்டே என்ற பாலைவன இடைச் சோலையைக் (Oasis) 1885-மார்ச் மாதம் கைப்பற்றினார்கள். ஆனால் அவர்களை ரஷ்யா விரட்டியடித்தது. எனவே ரஷ்யாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே போர் ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. எனவே ஆப்கானிஸ்தான் அமீர் அப்துர் ரகுமான் வைசிராய் டப்ரின் பிரபுவை ராவல்பிண்டியில் சந்தித்துப் பேசினார். இதன் விளைவாக அமீர் பாஞ்ச்டே மீது உரிமையை கைவிட்டு பதிலாக அதற்கு தென் மேற்கிலுள்ள சால்பிகார் (Zulfikar) என்ற இடத்தை வைத்துக் கொள்ள ஒப்புக் கொண்டார். இதற்கிடையில் ரஷ்ய ஆப்கானிய எல்லைப்பிரச்சனை 1887-ம் வரும் செயின்ட்பீட்டர்ஸ் பர்க் உடன்படிக்கைப்படி தீர்க்கப்பட்டது. இத்துடன் சிக்கல் முடிந்தது.

இவ்விதம் டப்ரின் தன்னுடைய அரசியல் தந்திரத்தாலும் நிதானத்தாலும் ஆப்கானிஸ்தான் வழியாக ரஷ்யாவுடன் ஏற்படும் போரைத் தடுத்துவிட்டார். அமீர் அப்துர் ரகுமானுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டார்.



### 2) லேண்ட்ஸ் டவுண் காலத்தில் ஆங்கில ஆப்கானிய உறவு: 1888-'94

ஆப்கானிய நாட்டு அமிர் அப்துர் ரகுமான் ஆங்கிலேயருடன் நட்பாக இருந்த போதிலும் அவர்கள் எல்லைப்புறக் கொள்கையை மாற்றிக் கொண்டதை வெறுத்தார். மேலும் வைசிராயின் போக்கு அமீரின் வெறுப்பை மேலும் வளர்த்தது. அமிர் ஆங்கிலேயர்களிடம் நட்பு கொண்டிருந்த அளவு வைசிராய் இவரிடம் பழகவில்லை. எனவே இரு நாடுகளுக்கும் இடையே இருந்த நட்புறவு மாறி பகைநிலை ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் போர் ஏற்படும் அபாயம் இல்லை.

### டூராண்ட் எல்லைக்கோடு: 1893

1893-ல் சர்மார்டிமர் டூராண்ட் (Sir Martimer Durand) என்பவரை லாண்ட்ஸ் டவுண் காபூலுக்கு அனுப்பிவைத்தார். 1893 அக்டோபரில் அமிருக்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையே எல்லைப் பற்றி ஓர் உடன்பாடு ஏற்பட்டது. எல்லைக்கோடு ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது. அது 'டூராண்ட் எல்லைக் கோடு' என்று வழங்கப்பட்டது. மேலும் இந்த உடன்பாட்டின்படி அமிர் பல மாவட்டங்களைப் பெற்றார். அவரது உதவித் தொகை 12லிருந்து 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இந்த உடன்படிக்கையால் இரு நாடுகளுக்குமிடையே மீண்டும் ஏற்பட்ட நல்லுறவு 1901-ல் அப்துர் ரகுமான் இறக்கும் வரை எந்த மாறுதலும் இன்றி நீடித்தது.

அப்துர் ரஹ்மான் கூறிய அறிவும் அரசியல் ஞானமும் கொண்டவர். ஆப்கானியர்களை நன்கு அடக்கியாண்டதுடன் ஆங்கிலேயர்களுடன் தான் கொண்ட உடன்பாட்டை ஏற்கும்படி செய்து விட்டார். ரஷ்யர்களைவிட ஆங்கிலேயர்களுடன் தொடர்பு கொள்வதே சிறந்தது என்பது அவரது கொள்கையாகும். தனது சுயசரிதை ஒன்று எழுதியுள்ளார் அப்துர் ரஹ்மான்.

### 3) இரண்டாம் எல்ஜின் பிரபுவும் ஆப்கானிஸ்தானமும்: 1894-'99

1893-ம் வருட டூராண்ட் உடன்படிக்கையின்படி எல்லைப்புற மாநிலமான சித்ரால் (Chitral) என்பது ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. 1897-ல் அந்த பகுதியில் பெருங்கலகம் ஒன்று ஏற்பட்டு சித்ராலின் தலைவர் கொல்லப்பட்டார். அங்கிருந்த ஆங்கில பிரதிநிதி டாக்டர் ராபர்ட்ச்ன் வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டது. இது ஆங்கிலேயர்களுக்கு ஒரு சோதனைமிக்க காலமாகும். தளராது போரிட்டு கலகம் செய்த எல்லைப்புற பழங்குடியினரை சரணடையச் செய்தனர். ஆனாலும் ஆங்கிலேயர்களுக்கு அதிக அழிவு ஏற்பட்டது.

படும் ஆரோக்கியமான மரபும் வளர்ந்தது. பொதுவாக அமைச்சர்களிட
ஒருமித்த கருத்தொற்றுமை காணப்பட்டது.

மாநில சுயாட்சி நல்ல முறையில் செயல்பட ஆங்கில அரசும் மு மனதுடன் ஆதரவளித்தது. சட்டமன்றங்களில் நிறைவேற்றப் பட் மசோதாக்களுக்கு கவர்னர்கள் மறுப்பின்றி ஒப்புதல் அளித்தனர். தங்கஎ ரத்து அதிகாரத்தை மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தினர். மேலு ஆங்கிலேய சிவில் அதிகாரிகளின் முழு ஒத்துழைப்பும் ஆதரவும் சுயாட்சி பொறுப்பினை ஏற்றிருந்த இந்திய அமைச்சர்களுக்கு பெருமளவி கிடைத்தன.

**காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகள் :**

காங்கிரஸ் கட்சியின் அமைச்சர்கள், ஆங்கிலேயர்களால் போற் பராமரிக்கப்பட்டு வந்த நிர்வாக இயந்திரத்தை மிகவும் சிறப்பா முறையில் கையாளப் பழகிக் கொண்டனர். ஏற்றுக் கொண் பொறுப்புகளின் தன்மைகளை எளிதில் புரிந்து கொண்டு வேகமா செயல்பட்டனர். மேலும் காங்கிரஸ் கட்சியின் தலைமை பீட சட்டதிட்டங்களை வகுக்கவும் வழிகாட்டவும் செய்தது. அமைச்சர்க அவைகளை நிறைவேற்றினர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது. இன கிளர்ச்சிகள் மற்றும் வன்செயல்கள் கடுமையாக நசுக்கப்பட்ட நிலத்தொடர்பான சீர்திருத்தங்களும், சட்டங்களும் செம்மையா முறையில் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. உழவு செய்வோரி உரிமைகள் காக்கப்பட்டன. நிலவரிகள் தீர்மானம் செய்யப் பட்டது விளைச்சலை பெருக்க பாசன வசதிகள் செய்து தரப்பட்டன.

சமுதாயத்தை சார்ந்த சீர்திருத்தங்களில் மிக முக்கியமானது மதுவிலக்கை அமுல்படுத்தியதேயாகும். காங்கிரஸ் ஆட்சி நடைபெற் மாநிலங்களில் உறுதியாக மதுவிலக்கு அமுல்படுத்தப் பட்டது. ஆரம் கல்வி வளர்ச்சிக்காக காந்தியின் திட்டமான வார்தா கல்வித்திட்டம் அமுல் செய்யப்பட்டது. இந்தக் கல்வியின் சிறப்புத் தன்மை என்னவென்றா கல்வியுடன் ஏதாவது ஒரு தொழிலையும் கற்பதேயாகும். முதியோர் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மற்றும் கிராமப்புற முன்னேற்றம், சிறுதொழி வளர்ச்சித் திட்டங்கள் போன்றவைகள் ஆக்கபூர்வமாக செயல்படுத்தப் பட்டன.



**மதிப்பீடு :**

இவ்விதமாக மக்களால் விரும்பப்படுகிற மக்களுக்காக உழைக்கிற அமைச்சர்களால் நிர்வகிக்கப்பட்ட மாநில சுய ஆட்சியினை மக்கள் பெரிதும் விரும்பி ஆதரித்தனர். திறமையான முறையில், திருப்தியளிக்கிற வகையில் வெற்றிகரமான வழிகளில் மாநில சுயாட்சி இரண்டரை ஆண்டுகள் செயல்பட்டது. மாநில சுயாட்சி எல்லா வகையிலும் வரவேற்கப்பட வேண்டிய ஒரு அரசியல் கொள்கை என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஆட்சி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# 39. இந்திய விடுதலைப்போராட்டம்

## (INDIA'S FREEDOM STRUGGLE)

இந்திய விடுதலை போராட்டம் திடீரெனத் தோன்றியது அல்ல. அது தோன்றி வளர்ந்து ஏற்றமிகு எதிர்காலத்திற்கு வித்திட்ட விதம் உலக வரலாற்றில் ஓர் உன்னத இடத்தைப் பெற்றுள்ளது. வியாபாரத்திற்காக இந்தியாவிற்குள் நுழைந்த ஆங்கிலக் கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனி, உள்நாட்டு அரசியல் சூழ்நிலைகளையும், பலவீனங்களையும் பயன்படுத்திக்கொண்டு இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தது. ஆட்சியாளர்கள் மக்களுக்கு இழைத்த கொடுமைகளினாலும், நாடு பறிக்கும் கொள்கைகளினாலும், கொடிய அடக்குமுறை நடவடிக்கைகளினாலும் வெறுப்படைந்த இந்தியர்கள் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து ஒழித்துக்கட்ட பல வழிகளில் முயன்று கொண்டிருந்தார்கள். 1806-ல் நடைபெற்ற வேலூர் கலகமும், 1824-ல் பரக்பூரில் நடந்த படைவீரர் கலகமும், 1857-ல் நடைபெற்ற முதல் சுதந்திரப்போர் என்று அழைக்கப்படும் சிப்பாய் கலகமும் அவைகளில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

ஆனால் இந்திய மக்களிடையே தேசிய எழுச்சியையும், அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது இந்த கலகங்கள் மட்டுமே அல்ல. மாறாக மக்களின் வரலாற்றுப் பாரம்பரியமும், இந்தியா ஒன்றுபட

வேண்டும் என்ற எண்ணமும், தங்களுடைய தாய் நாட்டைத் தாங்களே ஆளவேண்டும் என்ற குறிக்கோளுமே இந்திய மக்களிடையே தேசிய எழுச்சி உருவானதற்குக் காரணங்களாகும். இனத்தால், மொழியால், சமயத்தால், பழக்கவழக்கங்களால் மாறுபட்டு அந்நிய ஆதிக்கத்தில் அவதியுற்ற மக்கள் எழுச்சியுற்று, ஒன்றுபட்டு ஆங்கிலேயர் ஆதிக்கத்தை விரட்டி சுதந்திரம் அடைந்தனர். அத்தகைய சுதந்திர வேட்கையை ஏற்படுத்தக் காரணமானவைகளை நாம் இனிக்காணலாம்.

## சுதந்திர உணர்வைத்தூண்டிய சில காரணங்கள்

### 1. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்:

ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியாவில் நிலைபெறுவதற்கு முன்பு இந்தியா பல நாடுகளாகச் சிதறிக்கிடந்தது. ஆனால் இந்தியா முழுவதும் ஆங்கில நிர்வாகத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டது. ஆங்கிலேயரின் இந்த மேலாதிக்கம் நாட்டில் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்தியதுடன் ஆட்சி செய்த ஆங்கிலேயரிடமிருந்து தாங்கள் வேறானவர் என்ற எண்ணத்தையும், ஒரு தேசிய இனத்தைச் சார்ந்தவர் என்ற எண்ணத்தையும், இந்தியரிடையே வளர்த்தது. ஒரே இந்தியா என்ற உணர்வை ஏற்படுத்தியது. எனவே தங்களுக்குள் வேற்றுமை பல இருந்தபோதிலும், பொதுப் பகையாகிய ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஒழித்து சுதந்திரமடைய விரும்பினர்.

### 2. ஐரோப்பிய நாடுகளுடன் கொண்ட தொடர்பு:

இந்தியாவில் ஆங்கிலேயரின் மேலாதிக்கம் ஏற்பட்டதின் விளைவாக இந்தியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அதன் விளைவாக ஐரோப்பாவில் நிலவிய தேசிய உணர்வும், தாராளக் கொள்கைகளும் இந்தியரைக் கவர்ந்தன. அமெரிக்க சுதந்திரப்போர், இத்தாலிய இணைவு, ஜெர்மானிய இணைவு ஆகியவை இந்தியரிடையே சுதந்திரச் சிந்தனைகளைத் தூண்டியது. பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துக்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை இந்திய இளைஞர்களை கவர்ந்திருந்தன. அதுமட்டுமல்லாமல் இங்கிலாந்தில் நிலவிய ஜனநாயக ஆட்சி போலவே தங்கள் நாட்டிலும் அமைக்கப்பட வேண்டுமென்று மக்கள் சிந்திக்கத் தொடங்கினர்.

### 3. ஆங்கிலக் கல்வி:

ஆங்கிலக் கல்வி இந்தியர்களிடையே சிறந்த முறையில் மனமாற்றங்களை ஏற்படுத்தியது. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியமக்களில் பலர் ஆங்கிலக்கல்வியைக் கற்றதால் ஆங்கில



இலக்கியத்தைப் பற்றியும், மேற்கத்திய அறிஞர்களான ஜான்ஸ்டுவர்ட்மில், பர்க், ரூசோ ஆகியோரின் தத்துவங்களைப் படித்துணர்ந்தனர். இது பழமையில் ஊறி இருந்த இந்திய மக்களை புதிய கொள்கைகளை ஏற்கச் செய்தது. எதையும் ஆராய்ந்த பிறகே ஏற்றுக் கொள்ளும் பகுத்தறிவு உணர்வைப் பரப்பியது. மனிதாபிமானம், நீதி, சுதந்திர உணர்வு அநீதி எதிர்ப்பு ஆகிய உணர்வுகளை அறிந்து விடுதலை உணர்வு கொள்ளத் தூண்டியது.

### 4. பொருளாதாரச் சீர்குலைவு:

ஆங்கிலேயர் ஆதிக்கம் இந்திய பொருளாதாரத்தைச் சீர் குலைத்தது. இந்தியா சுரண்டலுக்குள்ளாகியது. இந்திய பொருளாதார முறையானது இந்திய மக்களின் நலனைப் புறக்கணித்துவிட்டு இங்கிலாந்து மக்களின் தேவைக்கேற்ப வகுக்கப்பட்டது. இதனால் இந்திய மக்களின் பொருளாதார நிலை மிக மோசமானது. துன்பத்தினால் வேதனையும் ஆங்கிலேயர் மீது வெறுப்பும் அடைந்தனர். படித்தவர்களும், மத்திய தர வர்க்கத்தினரும் வேலையில்லாமல் வாடினர். ஆங்கிலேயர் இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டிச் செல்கின்றனர் என்ற உணர்வு எல்லோர் மனதிலும் ஆழப்பதிந்தது. இது இந்தியர்களின் தேசிய உணர்வைத் தூண்டியது.

### 5. ஆங்கிலேயரின் தாராள ஆட்சிமுறை:

இந்தியர்கள் அரசியலிலும் ஆட்சிமுறையிலும் பங்குபெற்று அனுபவம் பெறுவதற்குண்டான சூழ்நிலைகளை ஆங்கிலேயர் ஏற்படுத்தியது அவர்களுக்கு தேசிய உணர்வு ஏற்படுவதற்கு வழி வகுத்தது. 1833-ம் வருட பட்டயச் சட்டத்தின்படியும், 1858 விக்டோரியா மகாராணி அறிக்கையின் விளைவாகவும், 1882-ல் ரிப்பன் பிரபு கொண்டு வந்த தலசுயாட்சி சட்டத்தின்படியும் இந்தியர்கள் நிர்வாகத் துறையில் ஈடுபட்டு நல்ல நிர்வாக அனுபவம் பெற்றனர். ஆங்கில ஆட்சியின் படிப்படியான நிர்வாகச் சீர்திருத்தங்கள் இந்தியர்களிடையே புதிய உணர்ச்சியையும் ஜனநாயக ஆட்சியில் அனுபவத்தையும் கொடுத்தன.

ஆங்கிலேயரது ஆட்சி மற்றொரு வகையில் இந்திய தேசிய இயக்க வளர்ச்சிக்கு உதவியது. அதாவது 'இந்தியாவை இந்தியர் அறியச் செய்ததுதான்' அது. இந்தியாவின் பழம் பெருமையையும், புகழினையும் அறியச் செய்தவர் ஆங்கிலேயரே. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அலக்ஸாந்தர் கன்னிங்காமின் மேற்பார்வையில் நடைபெற்ற தொல்பொருள் ஆராய்ச்சிகளும், மாக்ஸ்முல்லர், வில்சன், பெர்குஸன், சுரேந்திரலால் மித்ரா போன்ற அறிஞர்கள் எழுதிய ஒப்பற்ற நூல்களும் பண்டைக்கால இந்தியாவின் மாண்பையும் மங்காப் புகழையும் இந்தியர்

தீவிரமாகச் செயல்பட்டனர். திலகர் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டும் வகையில் பேசும் வல்லமை பெற்றவர். சிறந்த எழுத்தாளர். ''சுயராஜ்யம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவேன்' என்று முழுக்கமிட்டவர். அரசோடும், அதிகாரிகளோடும் சண்டையிட்டு முடிந்தால் உயிரையும் தியாகம் செய்து சுதந்திரம் பெற வேண்டும் என்றனர் தீவிரவாதிகள். மேற்கண்ட இருபிரிவினரைத் தவிரகாங்கிரஸ் அமைப்புக்கு வெளியே இருந்து பயங்கரவாதிகள் (Terrorists) என்ற பிரிவினர் செயல்பட்டனர். வன்முறைகள் கொலைகள் போன்ற பயங்கர நடவடிக்கைகள் மூலம் சுதந்திரம்பெற முயன்றனர்.

## 3. வங்காளப் பிரிவினையும் சுதேசி இயக்கமும்: 1905 ஜூலை 20

1899-ல் இந்தியாவின் வைசிராயாகப் பதவியேற்ற கர்சான் பிரபு மேற்கொண்ட பல நடவடிக்கைகளும், பின்பற்றிய சில கொள்கைகளும் மக்களிடையே அதிருப்தியையும் கசப்புணர்வையும் வளர்த்தன. மக்களின் பேச்சுரிமை எழுத்துரிமைகளைப் பாதிக்கும் வகையில் பல சட்டங்களை இயற்றினார் கர்சான். எல்லாவற்றிற்கும் மேலாக இவரது 'வங்காளப் பிரிவினை' இந்திய வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை உண்டு பண்ணியது. 'நிர்வாக வசதிக்காக' வங்காள மாநிலத்தை 'மேற்கு வங்காளம்' என்ற மாநிலமாகவும், கிழக்கு வ்ங்காளமும் அஸ்ஸாமும் சேர்ந்த 'கிழக்கு வங்காளம் என்றம் இரு மாநிலங்களாகப் பிரித்து 1905 ஜூலை 20-ம் தேதி அறிவித்தார்.

1905-ல் புதிதாக அமைக்கப்பட்ட மேற்கு வங்காளம், பீஹார்' ஒரிசா ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாகவும், 1,41,580 சதுர மைல்களைக் 'கொண்டதாகவும் இருந்தது. அதில் 42 மில்லியன் இந்துக்களும் 9 மில்லியன் மூஸ்லீம்களும் வாழ்ந்து வந்தனர். கிழக்கு வங்காளம் 1,65,400 சதுரமைல் பரப்புள்ளதாகவும் அமைந்தது. அதில் 18 மில்லியன் முஸ்லீம்களும், 12 மில்லியன் இந்துக்களும் இருந்தனர். இதன் நோக்கம் வங்காளத்தில் மலர்ந்துவரும் தேசியத்தை மறைமுகமாக அழிக்க செய்யப்பட்ட சதியே ஆகும். இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் வேறுபாட்டை ஏற்படுத்தி மக்களின் ஒற்றுமையைக் குலைக்கும் சதியே இது. எனவே இந்த சூழ்ச்சியான 'வங்கப் பிரிவினை'யை மக்கள் எதிர்த்தனர். புரட்சி செய்தனர். ஆனால் கர்சன் பிரபு தனது முடிவே சரியென வாதிட்டார். பிரிட்டிஷ் பேரரசும் இதனை ஒப்புக்கொண்டு 1905,அக்.16-ல் அமுல்படுத்தியது. (என்றாலும் 1911, டிசம்பர் 12-ல் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் இந்திய வந்த போது இப்பிரிவினை நீக்கப்பட்டது. மேலும் அதே ஆண்டில் தான் இந்தியாவின் தலைநகரம் கல்கத்தாவில் இருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது )



வங்காளப் பிரிவினை அமுலுக்கு வந்தவுடன் ஆங்கிலேயப் பொருட்களைப் புறக்கணிக்கும் சுதேசி போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது காங்கிரஸ். மான்செஸ்டரில் தயாரிக்கப்பட்ட துணிகள் எரிக்கப்பட்டன. லிவர்பூல் சர்க்கரை, உப்பு நிராகரிக்கப்பட்டது. இங்கிலாந்தில் செய்த தொப்பிகள், காலணிகள், முக்கிய மருந்துகளை மக்கள் புறக்கணித்தனர். பெரும் செல்வந்தர் வெறும் கால்களுடன் நடந்தனர். ஆங்கிலப் பொருட்களை உபயோகித்து வந்த குடும்பங்களில் செருப்பு தைப்பவர்கள், சவரம் செய்பவர்கள், சலவை தொழிலாளிகள் போய் வேலை செய்ய மறுத்தனர். இந்த புறக்கணிப்பு காலத்தில் மட்டும் மான்செஸ்டரில் இருந்து வந்த ஏழு கோடியே ஏழுபது லட்சத்து பதினாறாயிரம் அடி துணி விற்பனையாகாமல் பாதிக்கப்பட்டது! 'வங்காளப் பிரிவினை நிரந்தரமானது' என்றார் கர்சன் பிரபு. 'நிரந்தரமான உண்மையை நிரந்தரமற்றாதாக்குவோம்' என்று முழுங்கினார் சுரேந்திரநாத் பானர்ஜி.

வங்காளப் பிரிவினையின் முக்கியத்துவம் என்னவென்றால் 'இங்கிலாந்துப் பொருட்களைப் பகிஷ்காரம் செய்வது', 'வன்முறையைக் கையாள்வது' போன்ற உத்திகளை அரசாங்கத்திற்கெதிராக மக்கள் பயன்படுத்தத் துவங்கினர். காங்கிரசில் தீவிரவாதிகளின் கைகள் ஓங்கின. 1905-ல் காசியில் கூடிய காங்கிரஸ் மாநாடு இத்திட்டங்களுக்கு ஆதரவளித்தது. அத்துடன் காங்கிரஸ் வரலாற்றிலேயே முதல் தடவையாக 'பூரண சுதந்திரம் பெறுவதே குறிக்கோள்' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 4. சூரத் காங்கிரஸ் பிளவு: 1907

1905 காசி காங்கிரஸ் மாநாட்டிற்குப் பிறகு காங்கிரஸ் ஒரு புரட்சிகரமான இயக்கமாக மாறியது. இத்தகைய மாறிய சூழ்நிலையில் 1906-ல் காங்கிரஸ் மாநாடு தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் கல்கத்தாவில் கூடியது. இந்த மாநாட்டில் கோகலேயின் தலைமையிலான மிதவாதிகளுக்கும், திலகரின் தலைமையிலான தீவிரவாதிகளுக்கு இடையே கருத்து வேற்றுமைகள் தீவிரமடைந்தன. எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய 'முதுபெரும் கிழவரான' தாதாபாய் நௌரோஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'சுயராஜ்யமே இந்தியாவின் குறிக்கோள்' என்று தீர்மானிக்கபட்டது.

அடுத்த ஆண்டில் காங்கிரசில் புயல்வீசத் துவங்கியது. 1907-ல் நாகபுரியில் கூடவிருந்த மாநாடு சூரத்திற்கு மாற்றப்பட்டது. காரணம் திலகரின் சொந்த ஊரான நாகபுரியில் தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையிருக்காது என்று கருதிய மிதவாதிகள் சூரத்தைத்

தேர்ந்தெடுத்தனர். தேசியவாதிகள் என்று தங்களை அழைத்துக் கொண்ட தீவிரவாதிகள் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால் திசை தெரியாத பாதையில் காங்கிரஸ் செல்ல நேரிடும் என்று மிதவாதிகள் அஞ்சினர். ஆனால் தீவிரவாதிகளோ ஆங்கிலேயர்களிடம் அரசியல் பிச்சை எடுத்துப் பயன் இல்லை. நமது உரிமையை நாமே தட்டிக்கேட்க வேண்டும் என்று மனதார நம்பினர். கல்கத்தாவில் நிறைவேற்றிய தன்னாட்சி தீர்மானத்தை மிதவாதிகள் சூரத் மாநாட்டில் கைகழுவி விடுவர் என அஞ்சினர். எனவே மிதவாதிகளை தீவிரவாதிகள் கடுமையாகத் தாக்கிப் பேசினர்.

1907 டிசம்பர் 27-ம் தேதி ராஷ் பீஹாரி கோஷ் என்பவர் தலைமையில் சூரத் மாநாடு ஆரம்பமானது. ஆனால் தீவிர வாதிகள் லாலாஜெபதிராயை தலைவராக்க விரும்பினார். மேலும் சுய ஆட்சி, ஆங்கிலப் பொருட்கள் பகிஷ்கரிப்பு, தேசியக்கல்வி ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. எனவே ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசினர். குழப்பமும் கூச்சமும் நிலவியது. எனவே கூட்டம் மறு நாளுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. மறுநாளும் தீவிரவாதிகள் குழப்பம் செய்தனர். திலகர் தான் முதலில் பேச வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. மறுபடியும் குழப்பம், நாற்காலி, மைக், செருப்பு, கம்பு ஆகியவை பறந்தன! எனவே தீவிரவாதிகள் தனியாகவும், மிதவாதிகள் தனியாகவும் கூடினர். ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை என்று தீர்மானித்தனர். அதற்கேற்றபடி காங்கிரசின் அமைப்பையும் மாற்ற முற்பட்டனர். காங்கிரஸின் இந்த பிளவு வரலாற்றில் மிக முக்கியமான திருப்ப முனையாகும். இந்தப் பிளவு 1916 வரை நீடித்தது. மிதவாதிகள் எப்போதும் போலவே விண்ணப்பங்களையும், வேண்டுகோளையுமே நம்பினர். திலகரின் தலைமையிலான தீவரவாதிகள் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு மறியல், சாத்வீக மறுப்பு, சுதேசி இயக்கம் ஆகிய முறைகளை ஆதரித்தன.

### தீவரவாதிகள் ஒடுக்கப்படல்:

தீவரவாதிகள் வெளியேறிய பிறகு காங்கிரஸ் 1916 வரை ஒரு கட்சி அமைப்பு போலவே விளங்கியது. உண்மையான தேசிய அமைப்பாக செயல்படவில்லை. திலகரின் தலைமையிலான தீவிரவாத கட்சியும் ஓராண்டு காலத்திற்கு வேகமாகப் பணியாற்றி பின் ஓய்ந்து விட்டது. பம்பாய் மாநிலத்திலும், பிற பகுதிகளிலும் சூறாவளிச்சுற்றுப் பிரயாணம் செய்தார் திலகர். தன்னாட்சியைப் பெறுவதற்காக மக்கள் ரத்தம் சிந்தவும் தயாராக இருக்க வேண்டும் என்றார். 'நமது எதிர்கால வாழ்வை உருவாக்க வேண்டியவர்கள் நாம் தான் அதற்கான மனஉறுதி நம்மிடம் இருக்குமானால் அதனை நாம் அடைந்தே தீருவோம். சுயராஜ்யம் வெகுதொலைவிலில்லை. நாம் எப்போது நம்மை நம்பியே வாழக் கற்றுக் கொள்கிறோமோ அப்போதே அது நம்மைத் தேடி ஓடி வரும்!' என்றெல்லாம் கூறி மக்களிடம் விடுதலை உணர்வை ஊட்டினார்.



ஆனால் தீவிரவாதத் தலைவர்கள் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. தீவிரவாதிகள் பலர் நாடு கடத்தப்பட்டனர். திலகர் 1908-ல் ஆறு ஆண்டு கால தண்டனை பெற்று பர்மாவிலுள்ள மாண்டலே சிறைக்கு அனுப்பப்பட்டார். எவ்வித விசாரணையுமின்றி லாலா லஜபதிராய் அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்பட்டார். பிபின் சந்திரபாலுக்கு ஆறு மாதச் சிறைத்தண்டனை கிடைத்தது. தகுந்த தலைவரில்லாத் தீவிரவாதிகளின் பிரிவு செயலிழந்து செல்வாக்கிழந்து சின்னாபின்னமாகியது.

## 5. முதல் உலகப் போரும், இந்திய விடுதலைப் போராட்டமும்:

1907 சூரத் பிளவிலிருந்து முதல் உலகப் போர் ஆரம்பிக்கும் வரையில் மிதவாதிகளையும், தீவிரவாதிகளையும், முஸ்லீம்களையும் தங்கள் அரசியல் தந்திரங்கள் மூலம் பிரித்தாண்டு வெற்றி கண்டது. எனவே இந்திய தேசிய போராட்டத்தில் ஒரு மந்தமான சூழ்நிலை காணப்பட்டது. மிதவாதிகள் தீவிரமாக செயல்படாமல் இருக்க, காங்கிரசுடன் தோழமையாகப் பழகியது அரசு. வங்கப் பிரிவினை நீக்கப்பட்டது. இச்சூழ்நிலையில் 1914ல் முதல் உலகப் போர் ஆரம்பமானது. இந்தியர்களின் உதவி ஆங்கிலேயர்களுக்குத் தேவைப்பட்டதால் அரசு காங்கிரசின் உதவியை நாடியது. டில்லியில் பேரரசர் ஐந்தாம் ஜார்ஜ் தர்பார் நடத்தி இந்திய மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றார். முதல் உலகப்போரில் இங்கிலாந்துக்கு உதவியாக பணம், பொருள், படைவீரர்கள் ஆகியன அளிக்க இந்தியர்கள் முன்வந்தனர். போரின் இறுதியில் சாதகமான அரசியல் அனுகூலங்கள் கிடைக்கலாம் என்று கருதப்பட்டது.

உலகப்போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்த போது இங்கிலாந்து முஸ்லீம் நாடானதுருக்கியை கடுமையாகத் தாக்கியதால் இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் ஆங்கிலேயர்கள் மீது வெறுப்படைந்தனர். கிலாபத் இயக்கத்தை ஆரம்பித்து ஆங்கிலேயரை தீவிரமாக எதிர்த்தனர். எனவே காங்கிரசுடன் சேர்ந்து கொண்டு அரசை எதிர்க்க முற்பட்டது முஸ்லீம் லீக். இதற்கிடையில் தீவிரவாதிகளும் மிதவாதிகளுடன் சேர்ந்து ஆங்கில அரசை எதிர்க்க ஆரம்பித்தனர். இதன் அடிப்படையில் 1916-ல் இலட்சுமணபுரியில் நடந்த காங்கிரஸ் மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது. ஏனெனில் இந்த மாநாடு மிதவாதிகள், தீவிரவாதிகள், முஸ்லீம் லீகினர் ஆகிய மூன்று பிரிவினரையும் ஒன்றாக இணைத்தது.

c) ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இஸ்லாமியர்கள் பாதுகாப்பு உள்ளார்கள். எனவே ஆங்கில ஆட்சிக்கு எதிரான எந்த அரசி இயக்கத்திலும் முஸ்லீம்கள் பங்கு பெறக் கூடாது.

### அலிகார் இயக்கத்தின் முக்கியத்துவம்:

இவ்வாறு இரண்டு நாடு கொள்கை (two nation theory) அலி இயக்கத்தில் முக்கியமான கொள்கையாக இருந்தது. அலிகாரிலு ஆங்கில ஓரியன்டல் கல்லூரி மேற்கண்ட அரசியல் கொள்கை பரப்புவதில் முக்கிய பங்கு வகித்தது. அலிகார் கல்லூரியின் முதல முதல்வரான தியோடர் பெக் (Theodre Beck) என்பவர் இஸ்லா நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார். இந்தியாவில் ஆங் ஆதிக்கத்தைப் பாதுகாக்க இஸ்லாமிய சமய உணர்வுகளை தூண்டிவிடு அவசியம் என்று கருதினார். "Institute gazette" என்ற இதழை ஆரம் அலிகார் கல்லூரியின் எல்லா அரசியல் கட்டுரைகளையும் அ வெளியிட்டார். 1893-ல் 'முகமதிய ஆங்கிலோ ஓரியன்டல் இ பாதுகாப்பு கழகம்' (Mahammadam Anglo-oriental defence association India) ஒன்று ஆரம்பித்தார். இதில் இஸ்லாமியர்கள் மட் உறுப்பினர்களாக சேரலாம். இதன் நோக்கம் முஸ்லீம்களை அரசி நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் இருக்கச் செய்வதேயாகும்.

அடுத்த முதல்வராகப் பதவிஏற்ற மோரிசன் (Morrison) என்ப பெக்கின் கொள்கையை அப்படியே பின்பற்றினார். அகில இந் காங்கிரஸ் மற்றும் இந்துக்களுக்கு எதிராக இஸ்லாமிய சமய வாத உணர்வுகளை தூண்டிவிட்டார். இச்சமயத்தில் சையது அகமதுகான் அ இந்திய காங்கிரசுக்கு வலிமையான எதிர்ப்பாளராக ஆனார்.

இவ்வாறு அலிகார் இயக்கமே இந்தியாவில் முஸ்லீம் மதவா வளர முக்கியக் காரணமானது. தேசிய இயக்கத்திற்கு எதிராகவே நட தேசப் பிரிவினைக்கு வித்திட்டது அலிகார் இயக்கமே ஆகும். ஆனால் இ அலிகார் இயக்கத்தின் விளைவாக இந்திய முஸ்லீம்களுக்கு அ நன்மைகள் கிடைத்தது. இஸ்லாமிய சமயமும், சமுதாயமு சீர்திருத்தமடைந்தது. இஸ்லாமியர் நவீனமயமாயினர். கல்விபெற்ற அறிவொளி அடைந்தனர். அவர்களது பொருளாதார, சமுதாய அந்த உயர்ந்தது. எனவே இந்திய இஸ்லாமியர்களுக்கு சையது அகமதுகா அவரது அலிகார் இயக்கமும் ஆற்றிய சேவை மகத்தானது.



# 42. சமுதாய சீர்திருத்தங்கள்

## (Social Reforms)

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந்திய சமுதாயத்தில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சமுதாயம் வளர்ச்சியடைந்தது. சமுதாய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்த பல தடைகள் உடைத்தெறியப்பட்டன. இதற்காகவே பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்தியாவில் தோன்றிய எல்லா சமூகச் சீர்திருத்த இயக்கங்களும் பெண்கள் முன்னேற்றத்தையே வலியுறுத்தி வந்துள்ளன. எனவே இச்சீர்திருத்த இயக்கங்களால் இந்தியப் பெண்கள் வாழ்வு முன்னேற்றம் கண்டது.

### உடன்கட்டை ஏறுதல் ஒழிக்கப்படுதல்: (Abolition of Sati)

19-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட முக்கியமான சமூக சீர்திருத்தப் உடன்கட்டை ஏறுதலை ஒழித்ததேயாகும். உடன்கட்டை ஏறுதல் என்ற கொடிய பழக்கம் நீண்ட நெடுங்காலமாக இந்து சமூகத்தில் இருந்து வந்தது. கணவன் இறந்த பின் மனைவியும் தாமாகவே கணவன் சிதையில் ஏறி தன்னை எரித்துக் கொள்ள வேண்டும்'. இதுவே சதி என்று கூறுப்படும் உடன்கட்டை ஏறுதல் ஆகும். இது வங்காளம், ராஜபுதனம் விஜய நகரப் பகுதிகளில் அதிகமாகக் காணப்பட்டது. இது மனித இதயத்தில் அச்சத்தையும் அனுதாபத்தையும் ஏற்படுத்தும் சம்பவமாகும். முகலாயர் காலத்தில் அக்பர் இதை தடை செய்ய முயன்றார். ஆனால் எந்த பயனும் ஏற்பட வில்லை.

ஆனால் ராஜாராம் மோகன்ராய் என்பவர் சதியின் கொடுமைகளையும் தீமைகளையும் விவரித்து பல பிரசுரங்களை வெளியிட்டார். 'சாத்திரங்களின்படியும் எல்லா நாட்டு நீதியின் படியும் சதி என்பது படுகொலையே ஆகும்' என்றார். அப்போது பெண்டிங் பிரபு தலைமை ஆளுநராகப் பதவியேற்றார். ராஜாராம் மோகன்ராயின் உதவுடன் 1829-ல் சதி சட்ட விரோதமாக்கப்பட்டது. சதிக்கு உதவுபவர்கள் தூண்டுபவர்கள் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டது. இவ்வாறு இந்தியாவில் சதி சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டது. இது இந்து சமுதாயத்தில் செய்யப்பட்ட மிகப் பெரிய சீர்திருத்தமாகும்.

### சிசுகொலை ஒழிக்கப்படுதல் (Abolition of Infanticide)

சதியைப் போலவே கொடுமையான பழக்கம் 'சிசு கொலை' யாகும். இதுவும் இந்து சமூகத்தில் மதத்தின் பெயரால் காணப்பட்ட பெரும் பாவச்செயல் ஆகும். மத மூடநம்பிக்கையால் அறிவு மழுங்கி, கடவுளிடம் வேண்டுதல்கள் பெற, குழந்தைகளை கொன்று வந்தனர். ஆற்றல் தூக்கி போட்டோ, பட்டினி போட்டோ, கொன்று வந்தனர். இந்த காட்டுமிராண்டித் தனமான பழக்கத்தை ஒழிக்க 1795-லும், 1820-லும் சிசு கொலையை சட்டவிரோதமாக்கி விதிகள் பிறப்பிக்கப்பட்டன.

### அடிமைமுறை ஒழிப்பு(Slavery):

மற்றொரு சமூகக் கேடு 'அடிமை முறை'யாகும். அடிமை முறை இந்தியாவில் 1843-ல் ஏற்பட்ட சட்டம் மூலம் ஒழிக்கப்பட்டது. இதன் மூலம் அடிமைகள் விடுவிக்கப்பட்டனர். இவை தவிர நரபலி கொடுக்கும் பழக்கம் ஒரிசாவில் பல இடங்களில் காணப்பட்டது. இதுவும் 1847-ல் ஹார்டிஞ்ச் பிரபுவால் ஒழிக்கப்பட்டது. சமுதாயச் சீர்கேட்டை ஏற்படுத்தும் லாட்டரி சீட்டு விற்பனை, கஞ்சா, அபின் வியாபாரம் ஆகியவை தடை செய்யப்பட்டன.

### பலதாரமணம், சிறுவர் திருமணத்திற்குத்தடை:

இந்தியாவில் தோன்றிய சீர்திருத்தவாதிகள் அனைவருமே பலதார மணத்தையும், சிறுவர் மணத்தையும் ஒழிக்க வற்புறுத்தியுள்ளனர். கேசவசந்திர சென் என்பவரின் முயற்சியால் 1872-ல் 'சுதேசிகள் திருமண சட்டம்' (The native Marriage Act)ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன்படி பலதார மணம், சிறுவர் மணம் சட்ட விரோதமானவை' என்று அறிவிக்கப்பட்டது. இதுவும் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்பட காரணமானது.

### சாரதாச் சட்டம்:

இந்தியாவில் முதல் முதலாக பரோடா சமஸ்தானத்தின் மன்னர் கெய்க்வார் என்பவர் சிறுவர்கள் திருமணத்தைக் தடைசெய்யவும் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார். 1928-ல் சிம்லாவில் கூடிய சமூக சீர்திருத்தக்குழு, இந்தியாவில் நடைபெறும் திருமணங்களில் பாதிக்குமேல் 15 வயதுக்குட்பட்டவையாக இருக்கிறது என்று அறிவித்தது. இதன் விளைவாக 'ராய் சகிப்பு ஹரிபிலாஸ் சாரதா (Raj Saheb Harbilas Sarda) என்பவர் தனது முயற்சியினால் 1930 செப்டம்பர் 28-ல் சட்டசபையில்



குழந்தைகள் திருமணச் சட்டம் ஒன்றை நிறைவேற்றினார். அதன்படி திருமணப் பெண்ணுக்கு 14 வயதும், மணமகனுக்கு 18 வயதும் இருக்க வேண்டும். இது 1954-ல் வருட திருமணச் சட்டத்தின்படி பெண்ணுக்கு 18 ஆகவும் ஆணுக்கு 21ஆகவும் உயர்த்தப்பட்டது. இதற்கு குறைந்த வயதில் திருமணம் செய்தால் சட்டப்படி குற்றமாகும். இதுவும் சிறந்ததொரு சமுதாயச் சீர்திருத்தமாகும்.

### விதவை மறுமணம்:

விதவைத் திருமணம் குறித்து பல சீர்திருத்தவாதிகள் எழுதியும் பேசியும் வந்தனர். பண்டிட் ஈஸ்வரசந்திரவித்யாசாகர் என்பவர் 984பேர் கையொப்பம் கொண்ட மனு ஒன்றை அரசுக்கு அனுப்பினார். மேலும் பலர் அரசுக்கு மனுச் செய்தனர். அதன் பயனாக 1856 ஜூலை 26-ல் விதவை மறுமணமும், அத்திருமணத்தின் மூலம் பிறக்கும் வாரிசுகளுக்கு சொத்துரிமையும் உண்டு என்றும் சட்டம் இயற்றப்பட்டது. இது இந்து சமுதாயத்தில் செய்யப்பட்ட புரட்சிகரமான சீர்திருத்தமாகும். இது பெண்ணுரிமைக்கு பெரிதும் பாதுகாப்பளித்த சட்டமாகும்.

### தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம்:

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டுமென்ற எண்ணம் பொதுமக்களிடையே 18-ம் நூற்றில் பரவியது. பலதொண்டு நிறுவனங்கள் இவர்களின் மேம்பாட்டுக்கு அரும் பணியாற்றின. 1906-ல் 'தாழ்த்தப்பட்டோரின் சங்கம்' ஒன்று பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டது. இது மகார், சாம்பவர், நாமசூத்திரர் போன்ற தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டது. 1923-ல் பெனாரசில் கூடிய இந்து மகாசபைக் கூட்டம் 'ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஜாதி இந்துக்கள் அனுபவிக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று' தீர்மானம் நிறைவேற்றியது. காந்தியடிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரிய சேவை செய்துள்ளார்.

இவ்வாறு ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில் இந்து சமுதாயத்தில் காணப்பட்ட பல சமூக சாபக் கேடுகள் ஒன்றன்பின் ஒன்றாக ஒழித்துக் கட்டப்பட்டது. அது சமூக முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவியது. மக்களின் வாழ்க்கை முறையில் பல மாறுதல்களையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தியது.

## பெண்களின் விடுதலையும் முன்னேற்றமும்:

### (EMANCIPATION OF WOMAN)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண்கள் விடுதலையானது சமுதாய சமய சீர்திருத்த வாதிகளின் முக்கிய பிரச்சனையாக விளங்கியது. அப்போது பெண்கள் சமுதாயத்தில் மிகவும் தாழ்வான நிலையில் இருந்தார்கள். சமுதாயத்தில் நிலவிய கொடிய பழக்கங்களான சதி, பெண் குழந்தைகளைக் கொல்லுதல், பர்தாமுறை, குழந்தை திருமணம், பலதார முறை போன்றவைகளால் பெண்கள் மிகவும் மோசமான நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். கல்வி அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்ததால் அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படவில்லை. இவ்வாறு மக்கள் தொகையில் பாதிபங்கு இருக்கும் பெண்கள் தங்கி இருந்ததாலும் அவர்கள் பல வழிகளில் சுரண்டப்பட்டு வந்ததாலும் சமுதாயம் முன்னேற்றம் அடையவில்லை.

ஆனால் ஆங்கில ஆட்சியின் போது இந்தியாவில் பெண்கள் தங்கள் உரிமைகளைப் பற்றியும், சமுதாயத்தில் தங்களின் நிலையைப் பற்றியும் அறிந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

### ஐ) சமுதாய சீர்திருத்த வாதிகளும் பெண் விடுதலையும்:

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண் விடுதலைக்காக பல சீர்திருத்தவாதிகள் தோன்றினர். அவர்களது நடவடிக்கைகள் இந்தியப் பெண்களின் நிலையை உயர்த்துவதற்கான சூழ்நிலையையும், ஒரு தூண்டுதலையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அப்படிப்பட்ட சீர்திருத்தவாதிகளின் செயல்பாடுகளைக் காணலாம்.

#### a) ஈஸ்வர சந்திர வித்யா சாகர் :

#### Iswara Cha.,dra Vidyasagar, 1820 - 91

இவர் பெண்கல்விக்காகப் போராடிய புகழ்பெற்ற வங்காள சீர்திருத்தவாதி ஆவார். பலதார மணத்தை இவர் கடுமையாக கண்டித்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார். இவைகளை வலியுறுத்தி ஆங்கில அரசுக்கு பல விண்ணப்பங்களை அனுப்பினார். இவை தொடர்பாக சட்டம் ஒன்றை அரசு இயற்றியது. பெண்கல்விக்காக இவர் வங்காளத்தில் பல பள்ளிகளைத் திறந்தார். பெதியூன் (Bothune) என்பவர் ஆரம்பித்த இந்து கன்யா வித்யாலயாவுடன் (Hindu Kanya Vidyalaya) நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.



#### b) கந்துகுரி வீரசலிங்கம் பந்துலு :

#### Kandukuri Virasalingam Pantuly, 1848 - 1919

இவர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஒரு தெலுங்கு பிராமணர் ஆவர். தென்னிந்திய பெண் விடுதலைக்காக இவரும் பாடுபட்டார். விவேகவர்தினி (Viveka vardani) என்ற பத்திரிக்கையை வெளியிட்டார். 1874-ல் பெண்களுக்கான பள்ளிகளைத் தொடங்கினார். 1878-ல்' சமுதாய சீர்திருத்தகழகம்' (Society for Social reform) ஒன்றை அமைத்தார். இந்த கழகம் விழாக்களில் நாட்டியம் ஆட பெண்களை வாடகைக்கு கொண்டு வருவதை எதிர்த்து போராடியது.

#### c) மகாதேவ கோவிந்த ரானடே :

#### Mahadev Govinda Ranada 1842 - 1901

இவரும் இவரது மனைவி ராமாபாய் என்பவரும் பெண் விடுதலைக்காக போராடினார்கள். 1869-ல் ரானடே 'விதவை மறுமண சங்கத்தில்' சேர்ந்தார். இதன் மூலம் விதவை மறுமணத்திற்கும் பெண் கல்விக்கும் ஊக்கம் அளித்தார் இவர் புகழ் பெற்ற தேசிய சமுதாய கூட்டம் (National Social conference) என்ற அமைப்பை அமைத்தார். இதன் மூலம் சமுதாய சீர்திருத்தங்களை செய்து பாடுபட்டார். இவர் ஷர்தாசாதன் (Sharda Sadan) என்ற விதவைகளுக்கான பள்ளியை பம்பாயில் ஆரம்பித்தார். இவர்தான் விதவைகளுக்கு கல்வி அளித்த முன்னோடி சீர்திருத்த வாதி ஆவார்.

#### d) தோண்டா கேசவ் கார்வே : Dhonda Keshav Karve, 1858 -1962

பெண் விடுதலையின் மிகப்பெரிய சீர்திருத்தவாதி கார்வே ஆவார். இவர் விதவை மறுமணத்தை ஆதரித்தார். புனேயில் பெண் பள்ளிகளையும், விதவைகளுக்கான மறுவாழ்வு மையங்களையும் ஆரம்பித்தார். 1916-ல் முதலாவது இந்திய பெண்கள் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்தார்.

#### e) கங்காபாய் : Gangabai

தங்காணத்தைச் சார்ந்த பிராமண பெண்ணான இவர் கல்கத்தாவில் தங்கி பெண் கல்விக்காகப் பாடு பட்டார். இவர் 1893-ல் கல்கத்தாவில் பெண் கல்வியைப் பரப்புவதற்காக மகாகாளி பாதஷாலா என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

### f) சுப்புலட்சுமி : Subbalakshmi, 1886 - 1969

சென்னை மாகாணத்தில் பட்டப்படிப்பு பெற்ற முதலாவது இந்து விதவை ஆவார். இவர் குழந்தை விதவை (சிறுவயதில் திருமணமாகி கணவரை இழந்தவர்கள்) களின் மறுவாழ்வுக்காகப்பாடுபட்டார். அப்போது சென்னைமாகாணத்தில் ஆறுவயதுக்கும் பதினைந்து வயதுக்கும் இடைப்பட்ட விதவைகள் 22,000 பேருக்கும் அதிகமாக இருந்தனர். பெரும்பாலோர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள். அப்படிப்பட்ட விதவைகளுக்கான மறுவாழ்வு மையங்களையும், பெண் பாடசாலைகள், பயிற்சி மையங்களையும் ஆரம்பித்தார். குழந்தை திருமணத் தடைக்கு பெரிதும் பாடுபட்டார்.

## II ) பெண் விடுதலைக்கான அமைப்புகள் :

பெண்களின் விடுதலைக்காக பல அமைப்புகளும் தோன்றின.

a) நீதிபதி ரானடேயின் மனைவி ராமாபாய் என்பவரால் பெண் கல்வியைப் பரப்ப ஆரிய மகிழ சமாஜ் (Arya Mahila Samaj) என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1910-ல் சரளாதேவி (Sarladevi) என்பவரால் அலகாபாத்தில் இந்திய பெண்களின் நலன்களைப் பேணுவதற்காக 'பாரத் ஸ்திரி மகாமண்டல (Bhart Stree Mahamandal) என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

### b) இந்திய பெண்கள் சங்கம் : Women, Indian Associations, (WIA)

இது 1915-ல் டாரதி ஜினராஜதாசா (Dorothy Jinarajadasa) என்ற ஐரிஷ் பெண்மணியினால் ஆரம்பிக்கப்பட்டது. அன்னிபெசன்ட் இதன் முதல் தலைவரானார். இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் பெண் கல்வியைப் பரப்புவதே ஆகும். 1917-க்குப் பிறகு அரசியலிலும் ஈடுபட்டது. அப்போது இந்தியா அமைச்சராக இருந்த மான்டேகுவிடம் பெண்களுக்கு வாக்குரிமை கோரி விண்ணப்பம் அனுப்பியது. பெண்களின் உரிமைகளையும் நலன்களையும் பேணுவதற்காக ஸ்திரிதர்மா (Stree Dharma) என்ற இதழை ஆரம்பித்து நடத்தி வந்தது. இந்த இயக்கம். 1925-ல் பெண்களுக்கான தேசிய கவுன்சில் (National Council of Women for India) அமைக்கப்பட்டது.

### c) அனைத்திந்திய பெண்களின் கூட்டமைப்பு :

### All India Womens Conference (AIWE)

இந்த அனைத்திந்திய பெண்களின் அமைப்பின் முதலாவது மாநாடு மார்கரட்கசின் (Margaret Cousin) என்பவரது முயற்சியால் 1927



ஜனவரியில் புனேயில் கூட்டப்பட்டது. இந்த அமைப்பு குழந்தை திருமணம், பந்தா முறை ஆகிய வற்றை தடை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டது. 1940-ல் இதுவே பெண்களின் பிரதான அமைப்பாக இந்தியாவில் விளங்கியது. 1941-ல் ரோஷினி (Roshni) என்ற இதழை ஆரம்பித்து 1927-ல் ஆரம்பித்த போதுதான் சென்னை சட்ட மன்றத்தில் முதலாவது பெண் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1935-ம் வருடச் சட்டப்படி கட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை பெண்களுக்கு வழங்கப்பட்டது.

### பொது வாழ்வில் பெண்கள் :

இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல பெண் இயக்கங்கள் தோன்றின. பழமைவாதம், அநீதி, வேற்றுமை காட்டுதல் ஆகியவற்றுக்கு எதிராக போராட முன் வந்தனர். அன்னிபெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம் பெண்கள் அதிக அளவில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 1917-ல் இந்திய தேசிய காங்கிரசின் முதலாவது பெண் தலைவராக அன்னிபெசன்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928-ல் சரோஜினி நாயுடு இந்திய தேசிய காங்கிரசின் பெண் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆங்கில ஆட்சின் போது பெண் விடுதலைக்கான பல சட்ட பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1829-ல் சாதி சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டது. 1856-ல் விதவை மறுமணச் சட்டமும் இயற்றப்பட்டது. 1872-ல் பலதாரமணம், குழந்தை திருமணம் தடை செய்யப்பட்டது. விதவை திருமணம், கலப்பு திருமணம் சட்ட பூர்வமாக்கப்பட்டது. 1937-ல் இயற்றப்பட்ட இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தின்படி இந்துப் பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கப்பட்டு இந்து சமுதாயத்தில் ஆண்களுடன் சம நிலையில் வைக்கப்பட்டனர்.

### ) சுதந்திரமடைந்த பிறகு பெண் விடுதலை சட்டங்கள்

இந்தியா சுதந்திரமடைந்த பிறகும் பெண் விடுதலைக்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டது. பெண்களின் பாதுகாப்பிற்காகவும், ஆண்களினால் சுரண்டப்படுவதிலிருந்து தடுக்கவும் சட்டங்கள் இயற்றப்பட்டன.

1961-ல் வரதட்சணை தடுப்புச் சட்டம் (Dowry Prohibition Act) இயற்றப்பட்டது. இந்திய சமுதாயத்தில் திருமணத்திற்கு பெண் வீட்டாரிடமிருந்து வரதட்சணை வாங்கும் கொடிய பழக்கம் ஆழமாக

வேருன்றி உள்ளது. வரதட்சணை வாங்குவது சட்டப்படி தடுக்கப்பட்
விட்டாலும் மக்களிடம் ஏற்படும் விழிப்புணர்வும், சமுதா
சிந்தனைகளுமே வரதட்சணை முறையை ஒழிக்க முடியும்.

1955-ம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து திருமண சட்டப்படி (Hin Marriage Act) ஒருதார மணம் சட்டமாக்கப்பட்டது. பலதாரமண தடைசெய்யப்பட்டது. விவாகரத்து செய்யும் உரிமை பெண்களுக் வழங்கப்பட்டது.

1956-ல் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச்சட்டத்தின் படி (Hin Successian Act) தந்தையின் சொத்துக்களில் பெண்களுக்கும் உரி அளிக்கப்பட்டது. 1956-ல் இயற்றப்பட்ட இந்து சிறு வயது மற் பாதுகாவலர் சட்டப்படி (Hindu Minority and Guardianship Act) பெண்கள் தங்கள் குழந்தைகளின் பாதுகாவலராக இருக்க உரிமையளிக்கப்பட் 1954- ஜனவரி 1-ல் நடைமுறைக்கு வந்த திருமணச் சட்டப்படி (Marri Act, 1954) கலப்புத் திருமணம் சட்ட பூர்வமாக்கப்பட்டது. குறைந்தப திருமணவயது பெண்களுக்கு 18 ஆகவும், ஆண்களுக்கு 21-ஆக நிர்ணயிக்கப்பட்டது.

இவ்வாறு பல சட்டங்கள் மூலம் சமுதாயத்தில் பெண்களின் நி உயர்த்தப்பட்டுள்ளது. பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டும் வருகின்றது. இது இந்திய சமுதாயத் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.



# 43. கல்வி முறையின் வளர்ச்சி

## (DEVELOPMENT OF EDUCATION)

ஆங்கிலேயர் இந்தியாவில் பல்வேறு பகுதிகளை வென்று, தங்கள் அதிகாரத்தை நிலை நாட்டியபோது இந்தியக் கல்விமுறையில் தலையிடவில்லை. அதை அபிவிருத்தி செய்யவும் விரும்பவில்லை. ஆனால் சிறிது சிறிதாக நம்நாட்டு கல்வி முறையில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கியது. மேலும் இந்தியக் கல்வி முறையானது நம் நாட்டில் அவ்வப்போது எழுந்த சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களால் மட்டுமன்றி இங்கிலாந்தில் இத்துறைகளில் எழுந்த மாறுதல்களாலும் பாதிக்கப்பட்டது. 1800-ம் ஆண்டு வரை ஆங்கிலேயர்கள் ஒரு சில பள்ளிகளையும், கல்வி ஸ்தாபனங்களையும் அமைத்து தங்கள் குழந்தைகளுக்கு கல்வி போதித்தனர். ஆனால் இந்தியாவில் நிலையான கல்வி வளர்ச்சி 1813-ம் ஆண்டிலிருந்துதான் ஆரம்பித்தது. அதன்பின் கல்விமுறை சீராகவும் நிலையாகவும் வளர்ச்சியடைந்தது.

### ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு இந்தியக் கல்விமுறை:

ஆங்கிலேயர் வருகைக்கு முன்பாக இந்தியாவில் பழங்காலக் கல்வி முறையே நடைமுறையில் இருந்தது. சீரான ஓர் கல்வி அமைப்பு இல்லை. அப்போது கல்வியை மத நிலையங்களே போதித்து வந்தன. இந்துக்களின் 'பாடசாலைகள்', முஸ்லீம்களின் 'மதராசாக்கள்' ஆகியவற்றுடன் சில பாரசீகப் பள்ளிகளுமே இருந்தன. இந்துக்களுக்கு சமஸ்கிருதப் பண்டிதர்களும், முஸ்லீம்களுக்கு மௌல்விகளும் கல்வி போதித்தனர். கல்வி முறை அனைத்தும் இலக்கியம், தத்துவம், மதம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டே இயங்கின. கணிதம், அரசியல், வரலாறு, புவியியல் ஆகியவை போதிக்கப்படவில்லை. சுருங்கக்கூறின் நமது கல்வி முறையானது வெளியுலகத் தொடர்பு இல்லாம் இருந்தது.

### ஆங்கிலேயர் ஆட்சி தொடக்கத்தில் கல்வி வளர்ச்சி:

ஆரம்பத்தில் ஆங்கிலக் கம்பெனி இந்தியக் கல்வி முறையில் தலையிடவில்லை. 1698-ம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட 'கிழக்கிந்தியக் கம்பெனி சட்டம்' கல்விப்பணியில் அதனை முதன்முதலாக ஈடுபடுத்தியது.